**தலைப்பு 119 – மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 119 – மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 13 ஆந் திகதி பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் வலுசக்தி பிரிவு தொடர்பான வருடாந்த வருமானம் சேகரித்தல் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பாக முறையே ரூபா 113.59 மில்லியன் தொகை, ரூபா 225.27 மில்லியன் தொகை மற்றும் ரூபா 187.22 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், வருமானம் சேகரித்தல் முன்னேற்றம் 2020 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் 98 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், 2021 இற்கு ஒப்பாக 2022 ஆண்டில் 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | 2022 ஆண்டில் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமை மீது பெற்றோலியம் சார் உற்பத்தி தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் வியாபார நடவடிக்கைகள் எதிர்பார்த்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை வருமானம் குறைவதற்கு காரணமாக இருந்தது. | வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா மில்லியன் | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப் பிரமாணங்கள் 1645(அ), (ஈ) மற்றும் 1646 | - | அனைத்து தேக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2022 ஆண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் குறிப்பிட்டுள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் குறிப்பிட்டுள்ளவாறு அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஜூலை 20 திகதிய 01/2015 இலக்கம் கொண்ட அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பந்தி 07 | - | சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையில் I(அ) மற்றும் I (ஆ) இன் கீழ் அடங்காத, அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது அரையாண்டு வருமான அறிக்கைகள் குறிப்பிட்ட காலம் முடிவடைந்த நாள் முதல் 15 நாட்களுக்குள் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறையாண்டு வருமான அறிக்கை 2022.09.14 திகதி, பணிப்பாளர் நாயகம் அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேண்டியிருந்த போதிலும் உரிய அறிக்கைகள் குறிப்பிடப்பட்ட கால வரையறையுள் சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (இ) | 2022 செப்தம்பர் 21 திகதிய 06/2022 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கை | 5.50 | முடிவுறுத்தப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சுக்கு சொந்தமான இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்திருந்த உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு (7040530) 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் மூடப்பட்டிருக்காததுடன், 2023 பெப்ரவரி 28 திகதியில் உள்ளவாறு வங்கிக் கூற்றின் படி மீதி ரூபா 5.50 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | சரியான வங்கி மீதியை இனங் காண்பதற்காக தயாரிக்கப்பட்ட திருத்திய காசேட்டில் மற்றும் வங்கி இணக்கக் கூற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திய பின்னர் தேவையான மேலதிக கட்டுநிதிகள் திறைசேரியில் இருந்து பெற்றுக்கொண்டு, இராஜாங்க அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கினை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 செயற்பாட்டுக் கைநூலில் பந்தி 6.8 | - | அரச தொழில் முயற்சிகளின் வளங்கள் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் பயன்படுத்தக் கூடாது எனினும், இலங்கை மின்சார சபையின் மோட்டார் வாகனம் ஒன்று அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. | இதற்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1. திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 பந்தியின் ஏற்பாடுகளுக்கு | எதிர் காலத்தில் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கமின்றி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட திகதிக்கு சுமார் 04 மாதங்களின் பின்னர் அதாவது 2022 ஏப்ரல் 08 திகதி அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் வழிகாட்டல் இலக்கம் 12 இன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்க வேண்டிய வருடாந்த தொழில்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டமொன்று அமைச்சின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த தொழில்பாடுகளுக்கான மதிப்பீடுத் தொகை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | குறிப்பிட்ட வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | மின்சக்தி மற்றும் வலுசக்தி அசைச்சினால் 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை கால அட்டவணை அரச பெறுகை வழிகாட்டல் 4.2.2 இற்கு இணங்க குறிப்பிட்ட படிவத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 வழிகாட்டல்களின் படி பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விரிவான பெறுகைத் திட்டம் தயாரித்தலும், பெறுகை கால அட்டவணை தயாரித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீள்புத்தாக்க பிரிவினால் 2022 ஆண்டிற்காக அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பெறுகை வழிகாட்டல்களின் படி செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 3.1.2. செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| எரிபொருள் வழங்கலின் பண்புசார் தன்மையினை பாதுகாப்பதற்காக மற்றும் நம்பிக்கை தன்யினை ஏற்படுத்துவதற்கு இயலுமான வகையில் கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் ஏற்பாடு செய்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் அமைச்சின் கருமமொன்றாக காணப்பட்ட போதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானம் (CPC) மற்றும் இந்தியன் எண்ணெய்க் கம்பனி (LIOC) ஆகிய இரண்டு நிறுவனங்களும் அடங்கக் கூடியவாறு முறைசார் வேலைத் திட்டமொன்று அமைச்சினால் அறிமுகப்படுத்தி செயற்படுத்தப்படுகின்றது என்பதற்கான போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடியுடன் அதற்குரிய செயற்திட்டங்களை செயற்படுத்தும் அலுவல்கள் அனேகமாக முடங்கியிருந்தது. அடுத்த வருடத்தினுள் இந்த வேலைத் திட்டங்களை மேலும் வலுப்படுத்தி முறைப் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நாட்டினுள் உச்சமட்ட எரிபொருள் வழங்கலொன்றினை உறுதிப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.1.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முதுராஜவெல JET A - 1 களஞ்சிய தொட்டி நிர்மாணித்தல் மற்றும் முதுராஜவெலவில் இருந்து பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் வரை JET A – 1 பறிமாற்ற குழாய் பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2022 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காலப் பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், நாட்டில் நிளவிய நிதி நெருக்கடி காரணமாக அமைச்சரவை பரிந்துரையின் படி பெறுகை இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | இதற்காக 2020 ஆண்டின் போது போட்டி விலைகூறல் அழைக்கப்பட்டது. விலைகூறல்தாரரை தெரிவு செய்வதற்காக அமைச்சவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி முன்னிலையில் பெறுகை இரத்துச் செய்யப்பட்டது. | குறிப்பிட்ட காலப் பகுதியில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

### 3.1.4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் | | |
| (i) | பலாலி விமான நிலையம் பிராந்திய விமானப் பிரயாணத்தை செயற்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 575 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2019 ஜூன் 06 திகதிய 18/1229 இலக்கம் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் படி செயற்திட்டம் 2020 இரண்டாம் காலாண்டு இறுதியில் முடிவிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், இந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 4 சதவீதம் மாத்திரம் காணப்பட்டதுடன், அதற்காக ரூபா 9.8 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | தற்போது தேவையான எரிபொருள் நிரப்பும் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டதுடன், ஆரம்பமாக எரிபொருள் வழங்கும் அலுவல்கள் பேணிச் செல்வதற்காக ரூபா 9.8 மில்லியன் கிரயம் மேற்கொள்ளப்பட்டு மாற்றி ஒன்று (Convertainer) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>மேலும், எரிபொருள் வழங்கல் செய்முறையை விரிவாக மேற்கொள்வதற்காக தேவையான காணி ஒதுக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய ஏனைய கருமங்களுக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்து குறைந்த செலவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்வதற்கும், சிக்கல் தன்மையுள்ள நிலைமையிலும் தேவையான ஒருங்கிணைப்பொன்று மேற்கொண்டு செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | செயற்திட்ட இலக்கம் 2036 – மாபிம பாதையை மீண்டும் செப்பனிடுவதற்காக ரூபா 705 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்துடன், அதற்கான காணிகள் தனதாக்கல் அலுவல்கள் தாமதித்த காரணத்தினால் செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிதாக 2 காணித் துண்டுகள் தனதாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் பாதையின் நோக்குநிலையை மீண்டும் மாற்றுவதற்கு நேரிட்டிருந்தது. தற்போது அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயற்திட்ட இலக்கம் 2227 – SOREM காணியின் பாதுகாப்புத் தேவைப்பாட்டிற்காக பாதுகாப்பு காவல் கோபுரம், எல்லை சுவர்கள், வேலிகள் மற்றும் முடிவிடப் பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டம், அதற்குரிய காணிகளை தனதாக்கும் அலுவல்கள் தாமதித்த காரணத்தினால் செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | SOREM செயற்திட்டத்திற்காக காணிகளை தனதாக்கும் செயற்திட்டம் மற்றும் மாபிம பாதையை மீண்டும் செப்பனிடல் ஆகிய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிக்க இயலும். | - மேற்படி - |
| (iv) | LBD மாகல்லே இலக்கம் 04 மற்றும் 05 எண்ணைய் தாங்கிகளுக்காக உள்ளக கூரைகள் திட்டமிடல், வழங்குதல் மற்றும் நிறுவும் செயற்திட்டத்திற்காக ரூபா 35 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2022 ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், பௌதீக முன்னேற்றம் 25 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. | கடந்த மாதங்களில் நிலவிய விலைத் தளம்பல்களின் காரணமாக CIDA அங்கீகரிக்கப்பட்ட முறையில் விலை அதிகரிப்பு விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் வரை தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவுகளில் தாமதம், செயற்திட்டத்தின் முன்னேற்றத்தின் குறைவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | - மேற்படி - |
| (v) | கொலன்னாவையில் இருந்து கொழும்பு துறைமுக சேரம் படலை (Seram gate) வரை தற்போது காணப்படும் 10 அங்குல குழாய் வழியினை தாபிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 809.8 மில்லியன் தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் வேலை 2022 ஏப்ரல் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஏப்ரல் அளவில் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் வேலை மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்கு உரிய பாதையை கணப்பீடு செய்வதற்காக 2023 மே மாதம் ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஆ) | முன்னைய இராஜாங்க அமைச்சின் கீழ் இலங்கை நிலைபெறு தகு வலு அதிகார சபையின் மூலம் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கிராமத்துடன் உரையாடலின் கீழ் கலமுதுன, | நாட்டில் நிலவிய பண வீக்க நிலைமையின் மீது செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 147 மில்லியன் தொகையாக இருந்தது. இந்த | அரசாங்கப் பணம் விளைவற்றுக் காணப்படுவதற்கு இடமளிக்காமல் உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| உடுகல் தெபொக்க, மெதகெலே ஆகிய மூன்று கிராமங்களுக்காக தேசிய வலையமைப்புக்கு புறம்பாக மீள்புத்தாக்க வலுசக்தியை பயன்படுத்தி சிறிய வலையமைப்பு மூலம் மின்சார வசதிகள் வழங்குவதற்காக ரூபா 56.54 மில்லியன் தொகை 2021 திசெம்பர் 29 திகதி இலங்கை நிலைபேறு தகு வலு அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 33.36 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கலமுதுன கிராமத்திற்காக மின்சார வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், உடகல் தெபொக்க, மெதகெலே ஆகிய கிராமங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியளவிலும் மின்சார வசதிகள் வழங்கப்பட்டிருக்காததுடன், 2021 ஆண்டில் இலங்கை நிலைபெறு தகு வலு அதிகார சபையினால் பெறப்பட்ட ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 23.18 மில்லியன் தொகை விளைவற்று காணப்பட்டது. மேலும் பூர்த்தி செய்யப்படாத இரண்டு செயற்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் முக்கியத்துவம் காரணமாக இதனை மேலும் பேணிச் செல்வதற்காக மேலதிக தொகையொன்று செலவிட நேரிடின் அதனை இலங்கை நிலைபெறு தகு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

### 3.2.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 மெ.வொ. கொள்திறனொன்றினை தேசிய மின் வலையமைப்புக்கு பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் இலங்கை மின்சார சபையினால் செயற்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 19,288 மில்லியனிற்கான மொரகொல்ல நீர் மின் நிலையம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஆண்டில் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், | செயற்திட்டத்தின் ஆரம்ப அலுவல்கள் 2018 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அணைக்கட்டு மற்றும் சுரங்கம் உட்பட செயற்திட்டத்தின் பிரதான வேலை அலுவல்கள் 2020 ஜனவரி 16 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதுவரை 57.2% முன்னேற்றம் ஒன்றினை பெற்றிருந்தது. | வெளிநாட்டு உதவிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக அமைச்சினால் முறையான மேற்பார்வையொன்றுடன் செயற்திட்டம் குறிப்பிட்ட கால வரையறையுள் செயற்படுத்தப்பட வேண்டும். |

அண்ணளவாக 4 வருடங்கள் தாமத காலத்தின் பின்னர் இந்த வேலைகள் 2018 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் குறிப்பிட்ட தினத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் பெற்றிருந்த கடன் தொகையிற்காக சுமார் ரூபா 28 மில்லியன் தொகையொன்று (USD 177,931) தண்டப் பணம் என (commitment charges) செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. இந்த செயற்திட்டம் தாமதம் அடைவதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கோறிக்கையின் மீது செயற்திட்டத்தின் லொட் இலக்கம் 01 இனை மீள் திட்டமிடுவதற்கு நேரிட்டிருத்தல், தேசிய உள்ளூர் மீன் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தினால் அது தொடர்பாக மேலதிக சுற்றாடல் ஆய்வொன்று மேற்கொள்ள நேரிட்டதென காட்டப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 9,737 மில்லியன் தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன், அதன் பௌதீக முன்னேற்றம் 45 சதவீதம் அளவான் குறைந்த பெறுமதி ஒன்றை கொண்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் புதிய செலுத்துகை பாதைகள் மற்றும் புதிய வலையமைப்பு உப நிலையங்கள் நிர்மாணிப்பதன் மூலம் செலுத்துகை வலையமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் செலுத்துகை சேதங்களை குறைக்கும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்படும் தேசிய செலுத்துகை மற்றும் வினியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வலுசக்தி வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டம் 2015 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஜனவரி மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி | வழமைக்கு மாறாக ரூபா வின் பெறுமதி குறைவடைதல், எதிர் பாராத உள்நாட்டு பண வீக்கம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் நிலையற்ற தன்மை காரணமாக செயற்திட்டத்தின் பக்கேஜ் 01 – 2022.12.15 திகதி மற்றும் பக்கேஜ் 02 – 2022.11.12 திகதி முதல் செயற்திட்ட அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.<br><br>பக்கேஜ் 03 – 2023.02.16 திகதி மற்றும் பக்கேஜ் 04 – 2022.10.15 திகதி ஒப்பந்தக்காரர்களினால் ஒப்பந்த வேலைகளை இடைநிறுத்தியிருந்தமையால் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 திசெம்பர் 31 திதகி அளவில் இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 32,375 மில்லியன் தொகையாக காணப்பட்டிருந்ததுடன், பௌதீக முன்னேற்றம் சுமார் 57 சதவீதமாக காணப்பட்டது. | மீண்டும் கூறுவிலைகளை அழைப்பதற்காக நேரிட்டிருந்தது. | |
| (இ) | 2021 செயலாற்றுகை அறிக்கையின் படி 120 மெ.வொ. தேசிய மின்சக்தி முறைமைக்கு பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்ட உமாஓயா நீர் மின்சக்தி செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டுக் கிரயம் 530 மில்லியன் ஐ.அ.டொ. களாக காணப்பட்டதுடன், 2010 ஆண்டின் செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஜூன் 30 திகதி அளவில் மின் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டது. இந்த செயற்திட்டம் நீர் பாசன அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன், 2022 வரைவு செயலாற்றல் அறிக்கையின் படி 99 சதவீத பௌதீக் முன்னேற்றம் ஒன்றை பெற்றிருந்த போதிலும் 2023 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும், தேசிய மின்சக்தி முறைமையுடன் இணைப்பட்டிருக்கவில்லை. | தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள உமாஓயா செயற்திட்டம் தேசிய மின் சக்தி முறைமைக்கு இணைப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய இறுதிக் கட்ட பரிசோதனைகள் மற்றும் அவதானிப்புக்கள் (Testing and Commissioning) அலுவல்கள் பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தின் இறுதிக் கட்ட அலுவல்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2019 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மற்றும் 2022 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட முறையே ரூபா 6,787 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,103 மில்லியன் தொகைக்கான 300 கி.மீ. நீளமான மின் வினியோகப் பாதை மற்றும் கிரெண்டி நிர்மாணித்தல் மற்றும் பன்னிபிடிய வலையமைப்பு உப நிலையத்தின் 100 MVRA BSC நிர்மாணித்தல் ஆகிய செயற்திட்டங்கள் 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட செயற்திட்டங்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் முறையே 44 சதவீதம் மற்றும் 78 சதவீதம் ஆகும். | 300 கி.மீ. நீளமான வினியோகப்பாதை மற்றும் கிரெண்டி நிர்மானித்தல் செயற்திட்டத்தில் கனிசமான தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் தற்போது செயற்திட்டத்தின் அலுவல்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>பன்னிபிடிய வலையமைப்பு உப நிலையம் 100 MVRA BSC நிறுவும் செயற்திட்டத்தின் அலுவல்கள் விரைவாக மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலப் பகுதியினுள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மின்சக்தி பிரிவிற்குரிய 2005 ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதியின் மூலம் மீளளிப்பு செய்யப்படாத தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட பெறுமதி ரூபா 1,340,221 தொகைக்கான நட்டம் மற்றும் வலுசக்திப் பிரிவிற்குரிய 11 வாகன விபத்துக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 936,421 இற்கான நட்டம் நிதிப் பிரமாணம் 104(4) பிரகாரம் 2023 ஆகஸ்ட் 31 திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நட்டங்கள் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 முகாமைதத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சுக்கு சொந்தமான நிரந்தரமான கட்டிடம் ஒன்று காணப்படாமையால் 2022 ஆண்டிற்காக கட்டிட வாடகை என ரூபா 63.55 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தனியார் துறையின் கட்டிடம் ஒன்றில் அலுவலக அலுவல்கள் நடாத்தப்பட்டு வந்துள்ளது. | கட்டிடமொன்று காணப்படாமையால் நீண்ட காலம் முதல் தனியார் துறையின் கட்டிடமொன்றில் அலுவலக அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையிடம், அமைச்சினை நடாத்திச் செல்வதற்காக தேவையான இட வசதிகளுடனான இடமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவ்வாறு வசதிகளை வழங்கவதற்கு முடியாது என அறிவித்தமையால் அமைச்சரவை | அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக அனைத்து சந்தரப்பங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்துடன் தனியார் துறைக்கு சொந்தமான இந்த வளாகம் பெற்றுக்கொள்ளப்பட்டது என அறிவிக்கின்றேன். | |
| (ஆ) | 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 4 இற்கு இணங்க பொது மக்கள் பிரதிநிதித்துவம் ஒன்றினை பரிசோதனை செய்யும் போது அமைச்சின் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக 2008 ஜனவரி 05 திகதி முதல் 2015 ஜூன் வரை மின்சார சபையில் சேவையாற்றிய பொறியியலாளர் ஒருவர் 2003 ஜூன் 02 திகதிய PED/12 இலக்கம் கொண்ட அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 9.4 இற்கு இணங்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மின்சார சபையினால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத குறிப்பிட்ட சம்பள தொகுதியொன்று காணப்படாத மேற்கூறிய பதவிக்காக மின்சார சபையின் நிரந்தர பதவியின் சம்பளத்தில் 25 சதவீதம் செலுத்தும் முறைசாரா அடிப்படையின் மீது சேவையில் ஈடுபடுத்தி ரூபா 2,047,347 இற்கான தொகையொன்று திரண்ட நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 2023 ஏப்ரல் 18 திகதிய கணக்காய்வு ஐயவினா தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XLVIII பிரிவு 29 இற்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு அல்லது முறைசாரா விதமாக செலுத்தப்பட்டிருந்த பணத்தினை | அப்போது மின்சக்தி அமைச்சில் காணப்பட்ட தேவைப்பாட்டின் மீது இந்த நியமனம் செயற்பட்டிருந்ததுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விதிக்கப்பட்டவாறு தமது நிரந்தரப் பதவிக்கான சம்பளத்தின் ¼ படியொன்று அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | i. அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்ததுடன், கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களினால் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அனைத்து வகையிலும் சரியான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>ii. முறைசாரா கொடுப்பனவுகளை மீண்டும் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், குறிப்பிட்ட உத்தியோகத்தர் 2023 ஏப்ரல் 27 திகதி ஓய்வு பெற்றிருந்தார். | | |
| (இ) | 2019 ஆகஸ்ட் இல் வெளியிடப்பட்ட இலங்கை தேசிய வலுசக்தி கொள்கை மற்றும் மூலோபாய (திருத்திய) த்திற்கு இணங்க அந்தக் கொள்கையை செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக தேசிய செயற்பாட்டுக் குழுவொன்று மற்றும் செயற்பாட்டுத் தொகுதியொன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சினால் 2019 நவம்பர் மாதம் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட குழுக்கல் மேற்கூறிய கொள்கைகளை செயற்படுத்துவதில் சுறுசுறுப்பாக செயற்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை போலவே பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக அரச அலுவல்கள் மிக குறைந்த மட்டத்தில் நடாத்திச் செல்வதற்கு நேரிட்டிருந்ததுடன், இது தொடர்பாக கௌரவ அமைச்சரின் தலைமைத்துவத்துடன், நிறுவப்பட்டிருந்த குழு இந்த கருமத்தை நடாத்திச் செல்வதற்காக செய்முறைகள் 3 குழுத் தடவைகளில் கலந்துரையாடப்பட்டிருந்தது. | கொள்கையை ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீள்புத்தாக்க வலுசக்தியின் பங்களிப்பினை அதிகரிப்பதற்காக மையம் சார் ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்றின் மூலம் மீள்புத்தாக்க வலுசக்தி செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்காக செலவிடப்படும் நீண்டு காலத்தை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என கொள்கைகள் காட்டப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதென கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் நிலைபேறு தகு வலு கொள்திறனை அதிகரிப்பதற்காக ஒருங்கிணைப்பு மையமொன்று நிறுவி மீள்புத்தாக்க வலுசக்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக விருப்ப அபிவிருத்திகளின் மூலம் நோக்கக் கடிதங்கள் (EOI) அழைத்தல் அலுவல்கள் மேற்கொண்டு அதன் மீது எதிர் கால செயற்திட்டங்களை நிரல்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | தேசிய வலுசக்திக் கொள்கை மற்றும் மூலோபாய கூற்றில் அடங்கியுள்ள செயலாற்றுகை கால சட்டங்கள் மூலம் இலக்குகள் மற்றும் எதிர் பார்ப்புக் கொள்கைகள் நோக்கங்களுடன் தொடர்புபடக் கூடிய காலச் சட்டகங்கள் மற்றும் கொள்கை நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக பொறுப்பு ஒவ்வொரு | காலத்துடன் ஏற்பட்டிருந்த அரச கொள்கைகளில் முக்கியத்தும் மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான பல்வேறு சிக்கல் தன்மை போலவே எதிர்மறை காரணிகளின் காரணத்தினால் மேற்கூறிய இலக்குகளை திருத்துவதற்கு நேரிட்டிருந்த போதிலும் 2030 ஆண்டளவில் 70% மீள்புத்தாக்க வலுசக்தி | கொள்கையில் அடங்கியுள்ள இலக்குகள் மற்றும் திருப்பு முனைகளை உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. அதன்படி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சினால் வலுசக்தி பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தல், தேசிய பொருளாதாரத்திற்காக பாராட்டத்தக்க கிரயம் ஒன்றிற்கு வலுசக்தி வழங்கும் சேவையை வழங்குதல், மீள்புத்தாக்க வலுசக்தி பங்களிப்பினை மேற்படுத்துதல், வலுசக்திப் பிரிவின் நல்லாளுகையை வலுப்படுத்துதல் மற்றும் எதிர் கால வலுசக்கி உட்கட்டமைப்பு கட்டமைப்புக்காக காணிகளை பாதுகாத்தலுக்கான எதிர்பார்க்கும் இலக்குகள் மற்றும் திருப்பு முனைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் குறிப்பிட்ட பொறுப்புகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மூலவளங்களை உழைத்துக்கொள்வதற்காக மற்றும் காபன் நடுநிலைப்படுத்தும் இலக்கை பெற்றுக்கொள்வதற்கு தேவையான மூல உபாயங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இந்த அலுவல்கள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | தேசிய வலுசக்தி கொள்கை மற்றும் மூலோபாய கூற்றின் படி வலுச்சக்தி துறையின் செயலாற்றுகை மீது முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய உள்ளக மற்றும் வெளி நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பாக கண்டறிவதற்காக பிரதான தரப்பினரின் போதியளவு பிரதிநிதித்துவத்துடன், ''வலுசக்தி துறையின் பாதிப்பை மதிப்பாய்வு செய்யும் சபை'' என பெயரிடப்பட்ட உயர் மட்ட நிரந்தர செயற்குழுவொன்று 2019 ஆண்டு இறுதியளவில் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த சபை நிறுவப்பட்டதற்கான அல்லது அதன் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த வலுசக்தி துறையின் ஆபத்துக்களை மதிப்பாய்வு செய்யும் சபையை நியமன் செய்தல் தேசிய செயற்பாட்டுக் குழுவின் மற்றும் செயற்பாட்டுத் தொகுதி வழிகாட்டல் மீது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதமரின் பங்கு பற்றலுடன் நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் அந்த பொது ஆதனங்களில் கவனம் செலுத்தப்பட்டு உரிய எதிர் கால திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உள்ளவாறான பதவியணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் மின்சக்தி பிரிவிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 104 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 86 ஆக இருந்தமையால் 18 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. அதில் சிரேஷ்ட மட்ட 07 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதில் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (திட்டமிடல்), உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பிரதி/ உதவி பணிப்பாளர் ஆகிய பதவிகள் 2020 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டவுடன், மேலதிக செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) ஆகிய பதவிகள் 2021 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மின்சக்திப் பிரிவில் மூன்றாம் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 4 தொகை காணப்பட்டதுடன், அந்த மட்டத்தில் அனைத்து பதவிகளும் அதாவது நிருவாக உத்தியோகத்தர், 2 மொழி பெயர்பாளர் பதவிகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பதவியனொ்றும் 2020 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | அமைச்சின் பதவியணி மீளாய்வு செய்து உரிய முறையில் பதவியணி அங்கீகாரம் வழங்கும் படி விண்ணப்பிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரம் 2023.03.31 திகதி கிடைத்துள்ளது. | - மேற்படி - |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் வலுசக்திப் பிரிவினால் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 93 பேரை கொண்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு உள்ளாவாறான பதவியணி 76 ஆக காணப்பட்டமையால் 17 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. | இந்த பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி பொது நிருவாக, உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளருக்கு கடிதங்களின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டதுடன், இது வரை வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான | - மேற்படி |

| | | |
|---|---|---|
| அவற்றில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி), பணிப்பாளர் (பெறுகை), பிரதான பொறியியலாளர், பிரதி / உதவிப் பணிப்பாளர் (பெறுகை) கணக்காளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் ஆகிய சிரேஷ்ட மட்டத்தில் 06 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | |

**4.2 ஏனைய தரப்பினரிடம் பெற்றிருந்த மனித வளங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அமைச்சர் பதவியணியில் மற்றும் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக மின்சார சபைக்கு இணைக்கப்பட்டிருந்த 29 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 01/2021 இலக்கம் கொண்ட செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 3.5 இன் படி இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | 01/2021 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை வெளியிடும் போதும் இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் அங்கீகாரத்தின் மீது நீண்ட காலமாக இலங்கை மின்சார சபையினால் ஊழியர்கள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக அமைச்சினால் கோறிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |